

நல்லறம்

ஆதி பகவன்

கீலக௵ பங்குனிமீ

15-3-1969





விசயமங்கலம் ஜின கோயிலில் புலவர்களின் உருவச்சிலைகள்

நல்லறம்

(இலக்கியத் திங்கள் இதழ்)

நல்லறம்

"எங்குள அறத்திறேரும் இனிதுழி வாழ்க"

—சீவக சிந்தாமணி.

மலர் 1 | கீலக ஹூ பங்குனி மீ, 15—3—69 | இதழ் 3

உள்ளுறை

			பக்கம்
1.	நாகராஜா கோயில்	...	2
2.	ஆதிபகவன்	...	8
3.	ஜின தர்மத்தின் சாரம்	...	11
4.	விஞ – விடை	...	14
5.	கேவல ஞானத்தின் சாதனங்கள்	...	15
6.	கம்பதஹல்லி	...	21
7.	நினைவுக் கலை (அவதானம்)	...	24
8.	அறிஞர் அண்ணு கருத்தோவியம்	...	28
9.	புராதன ஜைனர் கோயில்	...	31

நாகராஜா கோயில்

[சி. பத்மநாபன்]

நஞ்சை நலம் கொழிக்கும் நாஞ்சில் நாட்டின் தலைநகராக விளங்கும் நாகர்கோவில், அதன் நடுவில் கோயில் கொண்டிருக்கும் ஐந்து தலை நாகராஜாவின் பெயரால் வந்திருக்கும் என்பதை நாம் அறிவோம். ஆனல் அதன் தோற்றமும் வரலாறும் இருளடைந்திருப்பது ஒரு பெருங்குறையாகும்.

தென்னகத்தில் சமண சமயம் கி. பி. 1-ம் நூற்ருண்டிலிருந்து பத்தாம் நூற்ருண்டு வரையிலும் மிகவும் சிறப்புற்றிருந்தது. சைவ சமயாச்சாரியர்களான திருஞான சம்பந்தர் பின்னர் சங்கராச்சாரியர் இவர்களது சமயப்போரால் சைவ சமயம் வளர்ச்சியடையவும் சமணம் தன் நிலையிலிருந்து தாழ்வுறவும் நேர்ந்தது. இக்கால மன்னர்களின் உதவியுடன், சமண சமயம், சைவ சமய ஆலயங்களாக மாற்றப்பட்டன. இவ்வாறு இந்து சமயம் தென்னுட்டில் மறுமலர்ச்சியடையவும் சமணப் பள்ளிகளில் இந்து சமய கடவுளரின் திருவுருவச் சிலைகள் இடம்பெறவும் தொடங்கின. தமிழகத்தின் தென் பகுதிகளில் காணப்படுகின்ற நினைவுச் சின்னங்கள் இங்கே சமண சமயம் தழைத்தோங்கி இருந்தது என்பதற்கு ஆதாரங்களாகத் திகழ்கின்றன. முன்னுள் திருவிதாங்கூர் மாநிலத்திலும் சமண சமயத் திருவுருவங்கள் பல இடங்களிலும் காணப்படுகின்றன. இவற்றுள் விளவங்கோடு தாலுக்காவில் நாகர் கோவிலிலும் காணப்படுகின்ற திருவுருவச் சிலைகள் குறிப்பிடத்தக்கவை. சித்ராலில் காணப்படும் பகவதி ஆலயம் பதிமூன்ரும் நூற்ருண்டுவரையிலும் சமணப் பள்ளியாகவே விளங்கியுள்ளது. இன்று இந்து சமயக் கோவிலாகக் கருதப்படும் நாகர்கோயில் பதினைந்தாம் நூற்ருண்டுவரை சமணப் பள்ளியாக திகழ்ந்த ஒன்ருகும்.

இக்கோயிலின் தோற்றத்தைக் குறித்து அறுதியிட்டுக் கூறுவதென்பது இயலாததொன்ருக இருந்து வருகின்றது. இவ்வாலயத்தின வரலாற்றை விளக்குகின்ற முறையில் அமைந்துள்ள வரலாறுகள், கல்வெட்டுகள் கிடைக்கின்றன. நமது அறிவுக்கெட்டிய வரையில் இது ஒரு சமணப் பள்ளியாக திகழ்ந்தது ஒன்றே என்பதும் பின்னர் இது ஒரு இந்து

ஆலயமாக மாற்றப்பட்டிருக்கிறது என்பதும் தெரிய வருகிறது. சமணர்கள் தமிழ்நாட்டில் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 8-ம் நூற்றுண்டில் உச்சி நிலையிலிருந்தனர். எனவே, அவர்களது பள்ளிகளும் அக்காலத்திலேயே தோன்றியிருத்தல் கூடும் என்று கொள்வதில் தவறில்லை. இங்கே காணப்படுகின்ற உருவங்களில் பல மழித்த தலையுடையனவாகவே இருத்தல், அவைகள் சமணத் துறவிகளின் சிலைகளே என்பதற்கு ஒரு ஆதாரமாகும். சமணத் துறவிகளை தீர்த்தங்கரர்கள் என அழைப்பார்கள். சர்மானியர் வில்லியம்ஸ் என்ற ஆங்கிலப் பேரறிஞர் சமண பௌத்த சமயக் கருத்துக்களை நன்கராய்ந்து எழுதிய 'பௌத்த சமயம்' என்ற நூலில் நான் கண்டறிந்த வரையில் சமணத் துறவிகள் தங்கள் காதுகளை தோள்களைத் தொடும்படி வடித்திருக்கிறூர்கள் என்று குறிப்பிடுகிறூர்கள். இக்கருத்து முந்தைய கருத்தை மீண்டும் வலியுறுத்துகிறது.

இவ்வாலயத்தின் தூண்களிற் காணப்படும் உருவங்களுள் பார்சுவநாதர், மகாவீரர், பத்மாவதி இவர்களது உருவங்கள் குறிப்பிடத்தக்கவை. அவற்றுள் படமெடுத்த ஐந்து தலை பாம்பின்கீழ் நிற்கும் உருவம் பார்சுவநாதர் என்றும், மற்றொரு உருவம் பத்மாவதி என்றும் அறியக் கிடக்கிறது. தியான நிலையில் இருக்கும் உருவம் சமணர்களின் கடைசி தீர்த்தங்கரான மகாவீரர்தான் என்பது அதன் அடியில் பொறித்திருக்கும் சிங்கத்தின் உருவங்களும், தலையின் மேலிருக்கும் முக்குடையும் சான்ருகும். சிங்கமும், முக்குடையும் மகாவீரரின் சிறப்பு அடையாளங்களென்று சமண சமயத்தின் சிற்ப சாஸ்திரம் கூறுகிறது.

சமண சமயத்தவர்களுக்கும், பாம்புகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறது. தமிழ் இலக்கியங்களில் சிறப்புடன் விளங்கிய ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்ருன நாககுமார காவியம் நமக்கு கிடைக்காதவாறு அழிந்து போயிற்று. சமண நூலான இதன் பெயரே சமணர்களுக்கும், பாம்புகளுக்கும் உள்ள தொடர்பை விளக்க ஒரு சான்ருக உள்ளது. சமணத் துறவியான பார்சுவ நாதருக்கும், பாம்புக்கும் உள்ள தொடர்பு குறிப்பிடத்தக்கது. இங்கு ஜெர்மானியர் வில்லியம்ஸின் படமெடுத்த பாம்பினடியிலே பார்சுவ நாதரின் உருவங்கள் காணப்படுகின்றன என்ற கூற்று நினைவு கூறத்தக்கதாகும்.

இந்த ஆலயத்திற்கு வருகை தருகின்றவர்களை வாசலி லேயே அமைந்திருக்கும் இரு பெரிய ஐந்து தலை நாகங்களின் படமெடுத்த கோலத்தில் அமைந்த சிலைகள் கவராமல் இருக்க முடியாது அவற்றுள் ஒன்றின் படத்தின் அடியில் சுற்றி வளையம் போலமைந்த அதன் உடற்பகுதியின்மேல் ஆழ்ந்த சிந்தனையில் அமைந்திருக்கின்ற உருவம் பார்சுவநாதர் என்று கருதப்படுகிறது. ஒரு காலத்தில் இணையாக வாழ்ந்த இரு பாம்புகள் மகிபாலன் என்ற கொடியவன் ஒருவனால் கொல்லப்பட்டன. அவைகள் இறக்கும் தருவாயில் பார்சுவ நாதரின் மந்திர ஒலிகளைக் கேட்டுக் கொண்டே கிடந்ததால் மீண்டும் அவைகள் கீழுலகில் பாம்புகளின் அரசனாகவும் அரசியாகவும் பிறந்தன. ஒருநாள் பார்சுவநாதர் ஆழ்ந்த தியானத்தில் இருந்து கொண்டிருந்தபோது அவரது தியா னத்தின் மூலம் வெளியான எண்ண அலைகளின் சக்தி வானத்தில் சென்று கொண்டிருந்த சம்வரன் என்ற தேவனின் போக்கினைத் தடுத்தது. இதனால் கோபமடைந்த சம்வரன் ஏராளமான மழையை பெய்வித்து அவரது தவத்தை அழிக்க முற்பட்டான். தியானத்தில் அமர்ந்திருந்த பார்சுவ நாதரைச் சுற்றிலும் வெள்ளம் பெருகத் தொடங்கியது. இவரைப் பாதுகாக்க வேண்டி பாம்பு அரசன் தரணேந்திரன் படமெடுத்து பார்சுவநாதரின் மேல் மழைபடாமல் குடையாக நின்றான். தண்ணீர் மேலும், மேலும் உயரவே பாம்புகளின் அரசியான ‘பத்மாவதி’ தாமரை மலரொன்றை அவரது அடியில் தோன்றச் செய்து காப்பாற்றினாள். இவ்வாறு பார்சுவநாதரின் தவத்தை அழிக்கின்ற முயற்சியில் சம்வரன் தோல்வியுற நேர்ந்தது. இது சமணர்களின் வழிவழி வந்த கதை. இதையே இவ்வுருவங்கள் சித்தரிக்கின்றன என்பது பொருந்தும்.

இவ்வாலயத்தில் காணப்படுகின்ற கல்வெட்டுகள் இது ஒரு இந்து ஆலயமல்ல. சமண சமயப் பள்ளியே என்பதற்கு ஆதாரமாக அமைந்துள்ளன. கி. பி. 1520 (696 M. B.)ம் ஆண்டில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று கீழேதரப் பட்டுள்ளது.

ஸ்வஸ்தி ஸ்ரீ அருளிச்செயல் கொட்டாறுன மும்முடி சோழபுரத்து நாகர்கோயிலில் பள்ளியுடைய குணவீர பண்டி தனும், கமலவாகன பண்டிதனும் கொட்டாற்று நாகர்க்கும் நாகராசாவுக்கும் உச்சி சந்தி பூசைக்கு நாள் ஒன்றுக்கு அமுதுபடி நாநாழியாகவும் திருநந்தா விளக்கு இரண்டாகவும்

நடத்திக்கொண்டு பொதும்படி ஈத்து. தொண்ணூறு ஆண்டு கார் முதலுக பள்ளிச் சந்தமா விட்டுக்குடுத்த நிலமாவது.

[ஆதாரம்: திருவிதாங்கூர் தொல் பொருளாராய்ச்சி தொடர். வெளியீடு பகுதி 6. பக்கம் 103.]

இதில் காணப்படும் குணவீர பண்டிதன் கமலவாகன பண்டிதன் ஆகிய பெயர்களே இவர்கள் சமணர்கள் என்பதை தெரிவிக்க போதுமான ஆதாரமாகும். இன்றும் பள்ளி என்ற சொல் இந்து சமய ஆலயங்களை குறிக்காமல் ஜைன சமய நிறுவனங்களையே குறிப்பதைக் காண்கிறோம். இந்து சமய ஆலயங்களுக்களிக்கப்படும் நிலபுலன்களை மான்யம் எனவும் குறிப்பிடுகிறோம். இந்த கல்வெட்டு ஒன்றே இது ஒரு சமண ஆலயமாகும் என்பதற்கும் பின்னர் இந்து ஆலயமாக மாற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கும் சான்றாகும்.

ஒரு சமணப்பள்ளி இந்து ஆலயமாக மாற்றப்படும்போது அங்கிருக்கும் தெய்வத் திருஉருவச் சிலைகளில் மாறுதல்கள் செய்யாமல் முடியாதல்லவா? இந்த நிலை நமது ஆலயத்திற்கும் ஏற்படாமலில்லை. மூலஸ்தானத்தின் வலது பக்கம் அங்கி மட்டிலுமே அணிந்து வாயுநிலையில் அமைந்திருக்கும் சிவலிங்கமும் 'அனந்த கிருஷ்ணன்' விநாயகர் சாஸ்தா ஆகிய திருவுருவங்கள் பின்னர் புதிதாக இந்துக்களால் நிறுவப்பட்டது என்பது அவைகள் அமைந்திருக்கும் பாங்கிலிருந்தே அறியலாம் இங்கிருக்கின்ற துர்காதேவி ஆலயம் மிக அண்மையில் நிறுவப்பட்டதென்பதை அனைவரும் அறிவர். அனந்தகிருஷ்ணன் உருவம் சமணத் துறவியான பார்சுவ நாதரின் திருவுருவத்திலிருந்து பிறந்திருக்கலாம் என்று தொல் பொருள் ஆராய்ச்சியிலும் இந்து சிற்பசாஸ்திர அறிவியலிலும் சிறந்து விளங்கிய P. A. கோபிநாதராவ் அவர்களின் கருத்து இங்கு நினைவு கூறத் தக்கது

இந்த ஆலயத்தைப் பற்றிய கர்ண பரம்பரை கதையொன்று வழக்கிலிருந்து வருகிறது. புல்லும், புதரும் நிறைந்திருந்த இந்த இடத்தில் இளம் பெண்ணொருத்தி புல் அறுக்க, அவளது அரிவாள் ஐந்துதலை நாகத்தின் தலையில் பட ரத்தம் பெருக்கெடுத்தோடியது. இது கண்டு அஞ்சிய பெண் பக்கத்து கிராமத்திற்கு ஓடிச் சிலரை அழைத்துவர அவர்களும் இந்த அதிசயத்தைப் பார்த்து அந்த இடத்தில் ஒரு சிறு கோவிலை அமைத்து வணங்கி வந்தனர். அப்போது தொழு

நோயால் வருந்திய களக்காட்டு மன்னர் இந்த அதிசயத்தைக் கேள்வியுற்று ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் இங்கு வந்து வழிபட வியத்தகு முறையில் தொழுநோய் பூரணமாகக் குணம் அடைந்தது. இதனல் இவ்வாலயத்தின் புகழ் எல்லா இடங்களிலும் பரவியது. மகிழ்ச்சியடைந்த மன்னரும் இன்றிருக்கும் இந்த ஆலயத்தைக் கட்டுவித்தார். அத்துடன் ஆவணி மாத ஞாயிற்றுக் கிழமைகளில் இவ்வாலயத்திற்கு வருகை தந்து தனது காணிக்கைகளைச் செலுத்தி பூஜைகளையும் நடத்திச் சென்ருர். அதன் பின்னர் இன்று வரை எல்லா ஞாயிற்று கிழமைகளையும் புனித நாளாகக் கருதி பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து நாகராஜாவைத் தொழுது பயனெய்திச் செல்லுகிருர்கள். ஆவணி மாத ஞாயிற்றுக் கிழமைகளில் இவ்வாலயம் திருவிழாக்கோலம் பூண்டிருக்கும்.

இக் கதையில் குறிப்பிட்ட களக்காட்டு மன்னர் கி. பி. 1516 முதல் 1535 வரையிலும் களக்காட்டை தலைநகரமாகக் கொண்டு திருவிதாங்கூர் மாநிலத்தை ஆண்ட பூதலவீரஸ்ரீவீர உதயமார்த்தாண்ட வர்மா ஆகும். (ஆதாரம்: திருவிதாங்கூர் தொல்பொருளாராய்ச்சித் தொகுப்பு நூல்—பாகம் 4, பக்கம் 91, பாகம் 6; பக்கம் 124) முன்பு கூறிய கல்வெட்டு இம் மன்னர் காலத்தில் ஏற்பட்டதாகும். அதில் குறிப்பிட்ட நிலங்கள் குணவீரபண்டிதன், கமலவாகன பண்டிதன் என்ற இரு சமண சமயத்தை சார்ந்தவர்களது வேண்டுகோளின்பேரில் இந்த மன்னரால் 'பள்ளிச்சந்தமாக' அளிக்கப்பட்டதாகும். இத்தகைய செய்திகளிலிருந்து பழைய சிறிய நாகராஜா ஆலயம் இவரது காலத்தில்தான் கேரளக் கட்டிடக் கலை அமைப்பில் அமைந்துள்ள தற்கால ஆலயமாகப் புதுப்பிக்கப் பட்டிருக்க வேண்டும் என்று கருதலாம்.

இவர் தொழுநோயால் வருந்தினர் என்றும், இங்கு வந்து குணம பெற்ருர் என்றும் ஆதாரங்கள் இல்லாவிட்டாலும் 30 ஆண்டுகளுக்கு முன்னல் மூலஸ்தானத்தின் பின்னல் தொழுநோய் போன்ற கொடிய நோய்களைக் குணப்படுத்தும் ஓடவள்ளி என்ற கொடி படர்ந்திருந்தது என்றும், பாம்புகளின் இருப்பிடமாக இருந்ததால் ஒரு அறநிலைய அதிகாரி அதை வெட்டி அகற்றிவிட்டார் என்றும் கூறப்படுவது பலரும் அறிந்த உண்மையாகும். பின்னர் பலர் அக்கொடியைத் திரும்ப நட்டு வளர்க்க முயற்சித்துப் பலனில்லாமற் போயிற்று. முன்பு இதன் இலையினைப் பிரசாதமாகக் கொடுக்கும் பழக்கம் இருந்து

வந்தது. ஒவ்வொரு இலையும் ஒவ்வொரு சுவையுடன் இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

மூலஸ்தானம் ஒரு எறும்புப் புற்றுப்போல் அமைந்திருந்த சிறு மண்மேடாகும். அந்தப் புற்று எப்போதும் ஈரமாகவே காணப்படுகிறது. அந்தப் புற்றிலிருக்கும் மண்ணே பிரசாத மாக வழங்கப்பட்டு வருகிறது. இது ஆறுமாத காலம் கறுப்பு நிறமாகவும், எஞ்சிய நாட்களில் வெள்ளை நிறமாகவும் இருந்து வருகிறது. எவ்வளவு காலமாகவோ எடுத்தும் அந்த மண் குறையாமல் இருப்பது அதிசயத்தக்க ஒன்றாகும். கோவிலைச் சுற்றிலும் நாகப் பாம்புகள் நிறைந்திருந்தாலும் இவ்வட்டா ரத்தில் பாம்புகடித்து இறந்ததாக இதுவரை சான்றுகள் எதுவும் கிடையாது. மூலஸ்தானத்தின் மேற்கூரை ஓலை வேயப்பட்ட தாக இருப்பது வேறு எந்த ஆலயத்திலும் காணப்படாத தனிச் சிறப்பாகும். நாகராஜாவின் விருப்பப்படியே இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு கதை வழக்கத்திலும் உண்டு.

தற்போது நகரின் பல பாகங்களிலிருந்தும் வெளியிடங் களில் இருந்தும் அனேக மக்கள் தங்களது குறைகளைத் தீர்த்துக் கொள்ளத் திரளாகக் கூடித் தினமும் வணங்குவதற் குரிய இடமாக இது திகழ்கிறது. அதிலும் சிறப்பாக ஞாயிற்றுக் கிழமைகளில் கூட்டம் ஏராளமாக வந்து செல்லும். இவ்வாறு வந்து பயனடைந்து செல்வோர் எல்லா நலங்களும் பெற்று மன அமைதியுடன் திரும்புகின்ற காரணத்தால் இவ்வாலயத்தின் புகழ் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

—தினமலர் [21-8-'66]

இக்கட்டுரையின் ஆசிரியர் திரு. சி. பத்மநாபன் அவர்கள் அண்மையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் இக்கட்டுரையை விரிவாக விளக்கி அருமையாக வெளியிட்டுள்ளார். இவ்வாசிரியருக்கு நமது நன்றி கலந்த வணக்கம்.

—ஆசிரியர்.

விழுக்கம் யுகாதித் திருவிழா

யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலவித்தி ஆகிய இரு இலக்கண நூல்களுக்கும் அரிய உரை இயற்றியருளிய குணசாகரர் திருவடிகளுக்கு 19—3—69 புதன்கிழமை மாலை 2 மணிக்கு சிறப்புப் பூஜையும், இரவு பட்டி மண்டபம் நிகழ்ச்சியும் நடைபெறும்.

ஆதி பகவன்

தொகுப்பு : தன்யன்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

இவ்வுலகில் அகரம் முதலிய மொழிக்குக் காரணமான எழுத்துக்கள் எல்லாம்; விருஷபதேவர் எனும் ஆதிபகவன் முதற்கொண்டுதான் வழங்கிவருகின்றது.

இதுவே இக்குறளின் தெளிவான, எளிதான, சிறப்பான பொருள். விடுத்து வலிந்து, வருந்தி, சுற்றிச் சுழன்று பொருள் காண்பது சிறப்புறு.

ஒரு மொழியில் ஒப்பிலா அறநூல் ஒன்றை யாக்கத் துணிந்த புலவர் பெருந்தகைக்கு; அம் மொழிக்குக் காரண மான, தன் நூலிற்குக் கருவியான எழுத்துக்களின் தோற்றத் திற்குக் காரணமானவர்—படைத்தவர் எவர் என்பதை அந் நெஞ்சம் நினைத்திருக்கும். தான் செய்யத் துணிந்த நற் காரியத்திற்குக் கருவியாக அமைவதைப் படைத்தவன் எவனோ; அவனை நினைப்பது நன்றியுடைமை மட்டுமல்ல அவனை உலகோர் உணர உரைப்பதுதான் போற்றுவதாகும்.

அவ்வழி இவ்வுலகினர்கு வாழும் முறைகளை வகுத்தளித்த பகவான் விருஷப தேவரே எண்களையும், எழுத்துக்களையும் உண்டாக்கி வகுத்தளித்தார் என்பதை அறிஞர் உலகம் அறியும் பகவான் விருஷப தேவர் முதன் முதல் பிராமி என்ற எழுத்துக்களைத் தோற்றுவித்தார். அம் மொழி பிற்காலத்தில் தாமிழி என வழங்கப் பெற்று இன்று தமிழ் என வழங்குகிறது என்ற உண்மையை ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக் கொண் டுள்ளனர். அவ்வெழுத்துக்களையே குறளாசிரியர் அகர முதல எனக் கூறுகிறார்.

மேலும் குறளாசிரியர் தமது நூலின் கடவுள் வாழ்த்தில் பத்து குறட்பாக்களிலும் தமது கடவுளை வணங்கிய பாக்களே உள்ளன. பின்னல் அறங்களை எவ்வாறு சொல்லிச்

செல்கின்ருரோ அதே வழியில் கடவுள் யார், அவன் தன்மை எது, அவனை ஏன் வணங்க வேண்டும், வணங்குவதால் நமக்கு யாது பயன் என்பதையே கூறி இருக்கின்ருர் என்பதை உணரவேண்டும்.

இனி பகவான் விருஷபதேவருக்கு 'ஆதிபகவன்' என்பது எவ்வாறு பொருந்தும் என்பதைக் காணலாம்.

பகவன் என்பது வடமொழிச்சொல். இது பக-என்பதன் அடியாகப் பிறந்தது. பக-என்பதற்கு வடமொழி நிகண்டு நூல்களில் பல பொருள்கள் கூறப்படுகின்றன. அறிவு-புகழ்-பெருமை-முக்தி-செல்வம்-ஆற்றல்- அறம் முதலியன அவைகள்.

பக-ஞானம் (அறிவு); பகவன்-அறிவுள்ளவன். அறிவு என்ற பொருளுடைமையால் சாதாரண அறிவுடையவனை 'பகவன்' எனக் கூறிவிட முடியாது. அவ்வாருயின் உயிர்களனைத்தையும் பகவன் என்று சொல்ல நேரும். பிறவுயிர்களைக் காட்டிலும் சிறப்பான—ஒப்பிலாத அறிவுடைய முழுதுணர் அறிவனுக்கே பகவன் என்பது பொருந்தும். விருஷபதேவர் முதலான தீர்த்தங்கரர்களே முக்கால நிகழ்ச்சிகளையும், மூவுலகுள்ளவற்றையும் ஒருங்கே அறிந்துரைக்கும் வாலறிவுடையவர்கள். அன்றியும் பிறப்பு, இறப்பு, காமம், வெகுளி, மயக்கம் ஆகிய குற்றங்களை உடையவர்கள் ஒருபோதும் முழுதுணர் அறிவனுக (சர்வக்ஞனுக) விளங்க இயலா என்பது தெளிவு. எனவே 'பகவன்'—என்பது அவர்கட்கே பொருந்தும்.

பக-புகழ்; பகவன்-புகழை உடையவன். தீர்த்தங்கரர்களுடைய புகழ் மூவுலகும் பரவிய ஒன்று. மேலும் உலகியல் நலன்களுக்காக அவர்கள் சமவசரணம் எனும் அமைப்புடன் உயிர்களுக்கு அறவமிழ்தம் மொழிந்தனர். அவர்களது அவ் அறவுரைகளைக் கேட்டுச் சென்றவர்கள்; அவர்களது புகழைக் கொண்டாடினர். எனவே அவர்கள் மூவுலகோர் புகழும் பெருமை உடையவர்களானதால் 'பகவன்'— எனப்பட்டனர்.

பக-பெருமை (மஹாத்மியம்); பகவன்-பெருமைகளுடையவன். தீர்த்தங்கரர்கள் பலவகைப் பெருமைகளுக்குரியவர்கள். பத்துவகை இயற்கைச் சிறப்பு (சுவபாவாதிசயங்)கள், பத்துவகை வினைநீங்கு சிறப்பு (கர்மக்ஷயாதிசயங்)க்கள், பதினுன்குவகை தெய்வீகச் சிறப்புக்கள் (தெய்வீகாதிசயங்கள்) ஆகிய 34 சிறப்புகளுக் குறியவர்கள். எனவே அவர்களுக்கு 'பகவன்'—என்பது பொருந்தும்.

பக-முக்தி; பகவன் முக்திக் குரியவன். தீர்த்தங்கரர்கள் வினையுடன் தோன்றினும் முடிவில் எண்வகை வினைகளையும் வென்று வினையின் நீங்கி-வீடுபேறு பெற்றவர்களாகையால் அவர்களுக்கு 'பகவன்'—என்பது பொருந்தும்.

வீடு என்பது பிறவா பெருநிலை.

சிலசமய நூல்கள் அவர்கள் இறைவன் உலக நலனுக்காக இவ்வுலகில் பலவகை அவதாரங்கள் எடுக்கின்றனர் என்பது இங்கே நினைத்தல் வேண்டும்.

பக-செல்வம்; பகவன்-செல்வன்.

தீர்த்தங்கரர்கள் இவ்வுலகில் தோன்றியது முதல் வீடு பெறும் வரை எல்லாச் செல்வங்களும் அவர்கள் பெற்றிருந்தமையை அறியலாம். மேலும் அவர்கள் எல்லாவற்றிற்கும் மேலான ஆன்மீகச் செல்வத்தையே வாய்க்கப் பெற்றவர்கள். அத்துடன் மோட்ச சம்பத்து எனும் முக்திச் செல்வம் வாய்க்கப் பெற்றவர்கள். எனவே 'பகவன்'—என்பது அவர்களுக்குப் பொருந்தும்.

பக-வீர்யம் (ஆற்றல்); பகவன்-ஆற்றலுடையவன்.

இவ்வுலகில் ஆன்மபலமே பேராற்றல் எனப்படும். தீர்த்தங்கரர்கள் பிறவியில் எல்லா உயிர்களையும் வருத்தும் பிறப்பு, இறப்பு முதலான எல்லா துன்பந்தரும் வினைகளையும் முழுதுமாக ஒழித்தும்; பலவகைச் செல்வங்களைப் பெற்றிருந்தும் அவைகளை வெறுத்து பற்றற்ற நிலையால் வீடு பேற்றிற்குக் காரணமான ஆன்மீக வலிமை உடையவராய் விளங்கியவர்கள் ஆதலால் 'பகவன்'—என்பது அவர்களுக்குப் பொருந்தும்.

பக-அறம்; பகவன்-அறத்திற் குரியவன்.

தீர்த்தங்கரர்கள் அறவுருவாய் விளங்கி இவ்வுலகிற்கு கொல்லாமை முதலிய நல்லறங்களை உரைத்துள்ளார்கள். ஆதலின் 'பகவன்'—என்பது அவர்களுக்கே பொருந்தும்.

இவ்வாறு ஜைன சமய அறவோர்கள் தீர்த்தங்கரர் இருபத்தி நால்வருக்கும் 'பகவன்' என்ற சொல் பொருந்துமாயினும்; அவர்களில் முதல்வராகிய விருஷபதேவரையே குறளாசிரியர் 'ஆதிபகவன்'—என தம் முதற்பாவில் குறிப்பிடுகின்றார்.

தெய்வம் தெளிமின்! தெளிந்தோர் பேணுமின்!!

ஜின தர்மத்தின் சாரம்

—[தமிழாக்கம் : பகவதி ஜெயராமன்]—

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மேற்கண்ட நியமங்களோடு தவத்தர்கள் ஐந்து நியதிகளையும் பின்பற்றவேண்டும். அவையாவன நடக்கை நியதி (கிரியா சமிதி), பேச்சு நியதி (பாஷா சமிதி), இரப்பு நியதி (ஈசனு சமிதி), ஏற்பு-வைப்பு நியதி (ஆதான-நிக்ஷேப சமிதி), கொடுப்பு நியதி (உத்சர்க சமிதி) என்பவை. நடந்து போகும் போது எந்தச் சிற்றுயிரையும் கொல்லுதலோ, துன்புறுத்தலோ செய்யாமலிருப்பதற்கு ஒருவகைக் கண்டிப்பான விழிப்புணர்வு இருக்கவேண்டும்; அதற்குத்தான் நடக்கை நியதி என்று பெயர். பேசும்போது தவறானவற்றைச் சொல்லிவிடாமல் வாய்மையை உரைப்பதே பேச்சு நியதியாகும். தூய்மையானதும், கேடுபயக்காததுமான உணவை உயிர்வாழ்வதற்காக யாசித்து உண்பதே இரப்பு நியதியாகும். ஒரு பொருளை மற்றவரிடமிருந்து பெறும்போதும், தேவையான தவிர்க்க முடியாத அதனைத் தம்மிடமே வைத்துக்கொள்ளும்போதும் கவனமாக இருப்பதே ஏற்பு-வைப்பு நியதி எனப்படும். தேவையற்ற, பாரமான பொருள்களை வேண்டியவர்களுக்குக் கொடுத்துவிடுவதில் தயக்கம் காட்டாமையே கொடுப்பு நியதி என்பதாகும்.

தூய நினைவுகளை உள்ளத்தில் குடியேற்றவும், தீய நினைவுகளை உள்ளத்தைவிட்டு அகற்றவும் தவத்தர்கள் சிந்திக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இச் சிந்தனைகள் பன்னிரண்டு வகைப்படும். நிலையாமைச் சிந்தனை அல்லது அநித்திய பாவனை என்பது இவ்வுலக வாழ்க்கை, இளமை, செல்வம், உடைமை என்பவற்றின் நிலையாத தன்மையினைக் கூறும்; ஒரு தவத்தன் இவ்வுலகப் பற்றுகள் யாவற்றையும் முறித்துக்கொள்ள இது அவருக்கு நிரம்ப உதவி செய்யும். சாக்காட்டுச் சிந்தனை அல்லது அசாரண பாவனை என்பது நோயையும், இறப்பையும் மனிதன் தவிர்க்க முடியாது என்பதனைப் புலப்படுத்தும்; ஒரு தவத்தன் தன் வினையை (கருமம்) அறுப்பதன் மூலம் நோயும், இறப்பும் ஏற்படாமல்

தடுத்துவிடலாம். இது ஊக்கமளிக்கும். இளமைச் சிந்தனை அல்லது சஞ்சார பாவனை என்பது நம்முடைய உறவுக்காரர்களின் நிலையிலாத் தொடர்பினை உணர்த்தும். உண்மையில் இவ்வுலகில் தாய், தந்தை, நண்பன், பகைவன் என்று உள்ள தொடர்புகளெல்லாம் போலியானவையே; நாம்தாம் வீணை இவ்வுறவுகளை உண்டாக்கி, அதன்படி நடந்து, வாழ்க்கை என்னும் கூண்டில் அகப்பட்டுக்கொள்கிறோம். இதுதான் உலகத்தின் இயற்கையாகும். இவ்வுணர்வு தவத்தனுக்கு மற்ற எவரிடத்தும் உள்ள உறவினையும் மற்ற எதனிடத்தும் உள்ள தொடர்பினையும் துண்டித்துக்கொள்ள ஒத்தாசை புரியும்.

ஒருமைச் சிந்தனை அல்லது ஏகத்துவ பாவனை என்பது 'நான் ஒன்றியாகப் பிறந்திருப்பதால், நான் பண்ணிய, அல்லது பண்ணும் பாவங்களுக்கு நானே துன்புற வேண்டியிருக்கிறது' என்னும் உணர்வை அளிக்க வல்லது; இத்தகைய சிந்தனைகள் மனிதனைத் தன் முயற்சியால் வினையினின்று நீங்கச் செய்யும்; இணக்கச் சிந்தனை அல்லது அந்நியத்துவ பாவனை என்பது உடம்புக்கும், உயிருக்கும் உள்ள தொடர்பினைக் காட்டுகிறது. உடம்பும், உயிரும் வேறானவை என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். உடம்பு வெறும் பிண்டமே; ஆனால், உயிர் அல்லது ஆன்மாவோ எல்லாவற்றையும் அறிந்துவைத்திருப்பதாகும். எனவே, தவத்தன் உடம்பையும், உயிரையும் பிரித்தே காணவேண்டும்; அப்போது உடம்பின் சதைத் தூண்டலுக்கு அவன் இசைவு தரமாட்டான். அருவறுப்புச் சிந்தனை அல்லது அசுசி பாவனை என்பது உடம்பின் கூட்டுப் பொருள்களைப் பற்றியது. மனித உடம்பு இரத்தம், சதை போன்ற சுத்தமற்ற பொருள்களால் ஆனது; அதேபோன்று மலம், மூத்திரம் போன்ற அசுத்தமான பொருள்களுக்கு இடமளித்திருப்பது. எனவே, இவ்வளவு அருவறுப்பான உடம்புக்குத் தவத்தன் அதிக முக்கியத்துவம் தரக் கூடாது என்பதே இச்சிந்தனையின் நோக்கம்.

வினைப் பெருக்கச் சிந்தனை அல்லது ஆஷ்ரவ பாவனை என்பது கருமம் ஆன்மாவுக்குள் பெருக்கெடுத்து வந்து தங்குவதைச் சுட்டிக் காட்டும். மனிதன் புலனின்பங்களைத் துய்க்கத் துய்க்க அவனுடைய வினை பெருகிக்கொண்டே போகிறது; இப்பெருக்கத்தைத் தடுத்து நிறுத்தவேண்டுமானால் மேலேயுள்ள சிந்தனையே அவனுக்குத் துணைபுரியக் கூடியது.

இச் சிந்தனைகள் மனிதனுக்கு மிகுந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வினைப்பெருக்கத்தின் பாய்ச்சலைத் தடுக்கும். செந்நினைவுச் சிந்தனை அல்லது சம்பரா பாவனை என்பது தீய நினைவுகளை விலக்கி நல்ல நினைவுகளை மனம் ஏற்கச் செய்யும். வினைவிளைவுச் சிந்தனை அல்லது நிர்ஜரா பாவனை என்பது கருமத்தின் கொடிய விளைவுகளை அறிந்து இதுவரை நம்மை அடைந்திருக்கும் வினைக்கட்டை நோன்பின் மூலமும் தியானத்தின் மூலமும் அழிக்க வழி காட்டுகிறது. மெய்யுலகச் சிந்தனை அல்லது லோக பாவனை என்பது இந்த உலகத்தின் உண்மையான இயல்பை நமக்கு அறிவுறுத்தவல்லது. சடப்பொருள் என்கிற முறையில் உலகம் நிலையானது என்றாலும் மாறுதலுக் குரியது என்கிற வகையில் இது நிலையற்றதாகவே இருக்கிறது. எனவே, புறப்பொருள்கள்யாவும் இவ்வுலகில் உற்பத்தியாகி இங்கேயே அழிந்துவிடுகின்றன. இத்தன்மை பற்றிய சிந்தனை உலகப் பொருள்களின் மெய்யான இயல்பை உணரச் செய்து நன்ஞானம் கைவரச் செய்யும். நற்காட்சிக் கடின சிந்தனை அல்லது போதி துர்லப பாவனை என்பது சரியான காட்சியையும் சரியான நடக்கையையும் இவ்வுலகில் பெறுவது மிகக் கடினம் என்பதை உணர்த்தும். அவ்வுணர்வு தவத்தனிடம் அந்நலன்களை எய்தி அவற்றின்படி ஒழுகுவதற்கான முயற்சியை வலுப்படுத்தும். அறச்சிந்தனை அல்லது தரும பாவனை என்பது வெந்துயர் நிறைந்த இவ்வுலகில் அறம் (religion) ஒன்றே யாவர்க்கும் புகல் தரக்கூடியது என்கிற எண்ணத்தை உண்டாக்குகிறது. அறத்தைத் தவிர மற்றவையாவும் இன்னலையும் இடுக்கணையுமே கொடுக்கும் என்பதை இச்சிந்தனை வலியுறுத்துகிறது.

தவத்தர்களுக்கு மேலும் பல நன்னடக்கை நியமங்களும் உள்ளன; அவை பட்டினி, தாகம், குளிர்ச்சி, வெப்பம் முதலிய இருபத்திரண்டு கடுமைகளை நுகர்ந்து வெற்றி பெறுவதாகும். தவத்திகள் அல்லது சாதுவிகளும் தவத்தர்கள் அல்லது சாதுக்கள் ஒப்பவே எல்லா விதமான கடினமான நோன்புகளையும் நன்னடக்கை விதிகளையும் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். தன்னடக்கத்தைப் பின்பற்றி அனைத்துவிதமான ஆசைகளையும் மண்ணுலகத்தின் உடைமைகளையும் கைவிட்டால் தவத்தர்களும் தவத்திகளும் தெய்வீக போதகர்களாகி விடுவர்.

ஜைன மதத்தைப் பின்பற்றும் இல்லறத்தாருக்குச் சிராவகர்கள் என்றும், இல்லறத்திகளுக்குச் சிராவகிகள் என்றும்

வினு? விடை.

வினு: திரு. ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் கட்டுரையில் வளையாபதியை மறைத்தவரைக் குறிப்பாக அறியலாம் என எழுதியுள்ளாரே அப்பகுதியை அடுத்த இதழில் வெளியிட ஏற்பாடு செய்வீரா? —P. நாகலிங்கம், வில்லிவாக்கம்.

விடை: ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களைக் கண்டு உயர்திரு. ஊ. வே. சுவாமிநாதய்யர் சுய சரிதத்திலுள்ள அப்பகுதியை யான் படித்துப் பார்த்தேன்.

அவ்வரிகளைப் படித்ததும் என் உள்ளம் உடைந்தது, அடா பாவி! தமிழ்த் துரோகி! தமிழ்த்தாயின் வளையலை மறைத்துவிட்டாயா? இன்னும் எத்தனை ஜைன நூல்களை மடத்திலிருந்து கொண்டுபோய் எரித்துவிட்டாயோ என வாய்விட்டுக் கதறினேன். தமிழ்த்தாயின் வளையலை மறைத்தாலும் முற்கால உரையாசிரியர்கள் எடுத்தாண்டுள்ள சுமார் 100 வளையாபதி செய்யுட்கள் கிடைத்துள்ளனவென்பதை அறிந்து உடைந்த வளையலாகிலும் தமிழ்த்தாயின் கரங்களில் மிளிரும் என ஆறுதல் அடைந்தேன், அச்செய்தியை நல்லற இதழில் வெளியிட அவசியமில்லையாகையால் மதிப்பிற்குரிய உயர்திரு. உ. வே. சுவாமிநாத அய்யர் அவர்கள் எழுதியுள்ள 'என் சரிதம்' என்ற நூலின் 867ம் பக்கத்தில் ஒரு கண்டனம் என்ற தலைப்பின் கீழுள்ள பகுதியைப் படித்து அறிந்துகொள்ளுவதே நலம்.

(முன்பக்க தொடர்ச்சி)

பெயர். இந்த இல்லறத்தார் தவத்தர்களை ஒப்ப உலகத்தை முற்றும் துறக்க வேண்டியதில்லை என்றாலும், இவர்கள் நேர்மையான முறையில் இல்லறக் கடமைகளைப் புரிந்து முற்போக்கான தூய வாழ்க்கையை நடத்த வேண்டும். இவர்கள் கண்ணியமாகவும், அமைதியுடனும், அமரிக்கையாகவும், நேர்மையுடனும், அன்பாகவும், நடுநிலையுடனும், பிறர் குணம் பாராட்டும் வகையிலும், பணிவு நிறைந்தும், நன்றி மிகுந்தும், மற்றவர்க்கு நலம் புரியும் பான்மையிலும் வாழ்க்கை நடத்த வேண்டும். இவர்களுக்கு பன்னிரண்டு விதமான நன்னடக்கை விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

(தொடரும்)

கேவல ஞானத்தின் சாதனங்கள் இயங்கும் விவரம்

S. கெஜபதி ஜெயின்

1. பீடிகை

ஆத்மாக்கள் புலன்களின் உதவி ஏதும் இன்றியே தாங்களே நேரில் தங்களில் இயற்கையாகவே அமைந்து தாமாகவே இயங்குகிற சுய சாதனங்களைக் கொண்டே முற்றும் உணரும் பேராற்றல் படைத்தவைகள். கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, வரம்பில் இன்பம், முடிவிலா ஆற்றல் எனப்பட்ட இந்நான்கு அனந்த குணங்களின் ஆதாரப் பொருளே ஆத்மத் திரவியம்.

பேரா இயற்கை எய்திய ஆத்மாக்கள் அசரீரிகள். வீடு பேறு பெற்றவர்களுக்குச் சரீரம் (நாமம்) அதனால் ஏற்படும் உயர்வுத் தாழ்வு (கோத்திரம்) துன்பம் (வேதநீயம்) பிறப் பிறப்பு (ஆயுள்) இந்நான்கும் கிடையாது. அதனால் அவர்கள் இவற்றிற்கு எதிரிடையான ஆகாசம் போன்று வசதி உதவிச் சக்தி (அவகாஹனம்) சமத்துவம் (அகுரு லகுத்துவம்) உபாதி இன்மை (அவ்வியாபாதம்) நுண்மை (சூட்சமம்) ஆகிய இந்நான்கு இயற்கைக் குணங்களுடன் திகழ்கிறார்கள். ஆத்மன் எண்ணிக்கையற்ற குணங்களுக்கு இருப்பிடம் எனினும் மேற்கூறப்பட்ட எட்டும் அதன் நல்சிறந்த குணங் கள்ாகும். ஆகையால் பேரா இயற்கை எய்திய ஆத்மன் எண்குணன் எனப் புகழப்படுகிறான்.

இறந்த, நிகழ், எதிர் எனப் பகுக்கப்பட்ட எல்லா காலங் களிலும் லோகம், அலோகம் எனப்பட்ட எல்லா இடங் களிலும் உள்ள உருவம் அருவம் எனப்பட்ட எல்லா பொருள் களையும் அவற்றில் கணந்தோறும் ஏற்படுகின்ற எல்லா மாறுதல்களுடன் அதாவது கால, தேச, பொருள்களின் வரம்பேதும் இன்றி அவற்றின் எல்லா மாறுதல்களுடன் ஒருங்கே உணரக்கூடிய வரம்பில் அறிவே கேவல ஞானம் எனப்படும். அனந்த ஞானம், திரிகால ஞானம், முற்றறிவு,

வாலறிவு, கடையிலா அறிவு, வரம்பில் அறிவு இவை யாவும் கேவல ஞானத்தைக் குறிப்பிடும் பல்வேறு சொற்களே ஆகும்.

உயர்ந்த குறிக்கோள் விளக்கமே தத்துவ ஞானம். அக் குறிக்கோளை அடைவிக்கும் சீரிய பாதையே ஒழுக்கம் ஆகும்.

ஜைன தத்துவம் முக்கியமாக சைதன்னியம் அல்லது உணர்ச்சி பற்றிய மேலும் வஸ்து சுபாவத்தை அதாவது பொருள்களின் உண்மையான முடிவுகள் பற்றிய விஞ் ஞானமே ஆகும். அது வெகு நுட்பமான ஆத்மன் மற்றும் பௌதிக விஞ்ஞானங்களின் ஒரு சிறந்த களஞ்சியம்.

புலன்களின் உதவியின்றியே எப்படி சீவன் முத்தரும், சித்தரும் தங்களிலேயே ஐக்கியமாகி இயற்கையாகவும் நிரந்தரமாகவும் இயங்கும் சுய சாதனங்களைக் கொண்டு கேவல ஞானிகளாகத் திகழ்கிறுர்கள் என்பதை ஜைன தத்துவம் மிகத் தெளிவாகக்கூறி இருக்கிறது.

ஆத்மாக்களின் சுய சாதனங்கள் இயங்கும் விவரணமே இக்கட்டுரை ஆகும்.

பௌதிக விஞ்ஞானம் பயிலாதவர்கள் நாளடைவில் அதன் மருமங்களில் பீதியும் அவநம்பிக்கையும் கொள்ளலாம் என்று நவீன பௌதிக விஞ்ஞான விமர்சகர் உயர்திரு. பெர்னுர்ட் ஜெப்பே அவர்கள் தங்கள் நூல் ஒன்றில் குறிப் பிட்டுள்ளார்கள். அவர்கள் கருத்து முற்றிலும் உண்மை என்பதற்கு தத்துவ ஞானம் பயிலாதவர்கள் ஏற்கெனவே தத்துவ ஞானத்தின்மீது அவர்கள் கொண்டுள்ள அவநம்பிக் கையே போதுமான சான்ருகும். தத்துவ ஞானத்தின்மீது பலர் கொண்டுள்ள அவநம்பிக்கையும் இக்கட்டுரையால் நீங்கும்.

ஜைன தத்துவம் ஆத்மாக்களையும் அவர்களின் ஆரம்ப மற்ற புனர்ப்பவச் சுழற்சிக்கு முக்கிய காரணமான பௌதிகப் பொருளையும், இவ்விரண்டும் இணைந்தும் தனித்தும் இருக்க இடமும், நடமாடவும், ஓய்வு பெறவும், மாறுதல்களை அடையவும் உதவுகிற வேறு நான்கு தனித்தனிப் பொருள் களையும் இப்பொருள்களின் சமுதாயமான அண்டத்தையுங் கூட விவரிப்பதால் பௌதிக விஞ்ஞானம் ஜைன தத்துவ ஆராய்ச்சிக்கு மிக மிக இன்றியமையாதது. புராதன ஜைன

பௌதிக விஞ்ஞான ஒலிச்சுவடிகள் பலவும் புறக்கணிப்பால் அழிவுற்றன. இப்பெருங் குறையைப் போக்கும் முறையில் நவீன விஞ்ஞான அறிவு பெரிதும் உதவுகிறது என்பதும் இக்கட்டுரையால் விளங்கும்.

ஜினன் என்ற பெயர் வினைகளை வென்றவன் என்ற தன்மையால் வந்த பெயராகும். அவர் போதித்த தத்துவம் ஜைன தத்துவம் என்று அழைக்கப்படுகிறது.

தோற்றமும், கேடும் இல்லாத இவ்வுலகில் மனிதப் பிறப்பெய்தி, மெய்ப்பொருள் தேர்ந்து, பொறிவாயில் ஐந்த வித்து, உள்ளும் புறமும் எனப்பட்ட எல்லாத் தொடர்ப் பாட்டின் நீங்கி, காமம், வெகுளி, மயக்கம் போக்கி, உற்ற நோய் பொறுத்து மற்றையோர்க்கு நோய் செய்யாது, வேண்டுதல் வேண்டாமை இலனுகி, இருள்சேர் இருவினை களின் வேரறுத்து, பேரா இயற்கை எய்தி வானோர்க்கு உயர்ந்த உலகம் புகுந்த ஆத்மனே ஜைனர் போற்றும் பரமாத்மன் அல்லது கடவுள். அவர் அண்ட சராசரங்களை இயற்றலும், காத்தலும், அழித்தலும், போற்றுவாரை உயர்த்தலும், போற்ருதாரைத் தாழ்த்தலும் புரியாதவர். எவ்விதத் தொடர்பும் அற்றவர்.

அப்பெருமகன் வினையின் நீங்கி விளங்கிய அறிவினுல் சீவன் முத்தனுக உலகில் நின்று கருணை பரவசனுகி இச்சை ஏதும் இன்றி எல்லா உயிர்களும் இடர் நீங்கி உயரின்பம்பெற போதித்த மார்க்கமே ஜைன தத்துவம். எல்லா உயிரினங் களும் துன்பமற்ற இன்பமே விழைகின்றன, அதற்கு உறு துணையான கொல்லாமை அறத்தையே அடிப்படைக் கொள்கையாகக் கொண்டுள்ள ஜைனம் கொல்லா அறம் என்றும் நல்லறம் என்றும் அழைக்கப்படுகிறது.

வஸ்து சுபாவமே அதாவது பொருளின் இயற்கையே தருமம் அல்லது அறம் எனப்படும். பொருள்கள் எல்லா வற்றிலும் ஒப்பற்றச் சைதன்னிய குணம் (பிரக்ஞை, உணர்ச்சி, consciousness) படைத்துள்ள ஆத்மனே மிகச் சிறந்தவன். அதனுல் ஆத்மனின் உண்மைச் சுபாவமே தருமம் அல்லது அறம் ஆகும். ஆத்மன் இயற்கையில் ஆகாசம் போன்று பிற பொருள்களைத் தடுப்பதோ அல்லது பிற பொருள்களால் தடுக்கப்படுவதோ அற்றவன். அதாவது அவகாஹனத்துவன். பிற பொருள்கள் தங்கு தடையின்றி

இருக்கவும், செல்லவும் இடம் அளிப்பவன். பிற எந்தப் பொருளாலும் தடுக்க முடியாதவன். தடை செய்யும் பொருளே வாதை இழைக்கவோ அல்லது அடையவோ முடியும். இக்காரணங்களால் ஆத்மன் அவ்வியாபாதன். அதாவது துன்பம் இழைக்காதவன். துன்பம் அற்றவன். இதனால் ஆத்மனின் இயற்கை கொல்லாமை (பாதைச் செய்யாமை) ஆகும். இதுவே உண்மையான அறம். ஆத்மனின் கொல்லாமைச் சுபாவத்தைக் கடைப்பிடிக்க வழிகோலுவதே ஜைன தத்துவம் விவரிக்கும் ஒழுக்கம் (சாரித்ரம்) ஆகும். கொல்லாமை மேற்கொண்டு ஆத்மனின் பிற சுபாவங்களை அதாவது என் குணங்களைச் சிந்தித்தலும் அச்சுபாவ நிலையிலேயே நிலைத்திருத்தலுமே பரமாத்ம பாவனை அல்லது சுக்கிலத் தியானமாகும். தன்னையும் தன் குணங்களையுமன்றி வேறெவற்றின் சிந்தனையும் அனுபவமும் நீங்கிய ஆத்மனின் விருப்பு வெறுப்பற்ற இந்நிலையே வேண்டுதல் வேண்டாமை, நடுநிலைமை, சமம், சமரச பாவம், சமாதி என்று பலவாறு கூறப்படுகிறது.

மூவா முதலா அதாவது தோற்றமும் கேடும் இல்லாத அண்ட சராசரங்கள் யாவும் ஆறு பொருள்களால் (திரவியங்களால்) இயன்றது. திரவியம் என்றாலும் வஸ்து என்றாலும் பொருள் என்றாலும் ஒன்றே. திரவியங்களுக்கும் தோற்றுவாயும் அழிவும் கிடையாது. கணந்தோறும் ஏற்படுகின்ற மாறுதல்களினூடே என்றும் நிலைத்திருப்பவை. பழைய உருவம் அல்லது நிலைமை அழிந்து புதிய உருவம் அல்லது நிலைமை தோற்றுவதற்கே மாறுதல் (பரியாயம்) எனப்படும். ஒரு புதிய உருவம் தோன்றவோ அல்லது பழைய உருவம் அழியவோ பொருளின்றி அதாவது ஆதாரமின்றி நிகழ முடியாது. பொருளின் உண்மையான அல்லது முக்கியமான இலட்சணம் பயன்படுதல் (பிரயோஜனப்படுதல், உபயோகமுள்ளதாதல்) ஆகும். மாறுதலை அடையாமல் ஒரு பொருளும் காரியம் இயற்ற முடியாது. காரியம் இயற்றாமல் பொருள் பயனுடையதாக இருக்க முடியாது. திரவியம் (பொருள்) என்றால் பாய்தல் அல்லது ஊடுருவுதல் அதாவது மாறுதல்களூடே நிலைத்திருத்தல் ஆகும். பழைய உருவம் அல்லது நிலைமை அழிவும் புதிய உருவம் அல்லது நிலைமை உண்டாதலும் கூடிய மாறுதல்கள் நிகழ ஆதாரமான நிரந்தரமாக நிலைத்திருக்கும் பொருளே திரவியமாகும். அழிவும், தோற்றமும், நிலைத்த தன்மையும் கூடிய இம்முக்கூட்டு நிலையே சத் எனப்படும். இவ்வகையில் எல்லா திரவியங்களும் சத் ஆகும்.

ஜீவத் திரவியம், ஆகாசத் திரவியம், தருமத் திரவியம், அதருமத் திரவியம், காலத் திரவியம், புத்கலத் திரவியம் ஆகிய இவைகளே ஆறு திரவியங்கள். இவற்றில் ஜீவத் திரவியம், காலத் திரவியம், புத்கலத் திரவியம் இம்மூன்றும் வருக்கம் அல்லது ஒத்த பொருளின் கூட்டம் ஆகும். அண்ட சராசரங்கள் யாவும் இவ்வாறு திரவியங்களின் தொகுப்பே ஆகும்.

(1) ஜீவத்திரவியம்: சைதன்னியம் (பிரஞ்ஞை, உணர்ச்சி, consciousness) எனப்பட்ட மேன்மையான குணம் படைத்துள்ள சீவனே (ஆத்மனே) எல்லாப் பொருள்களிலும் தலைசிறந்தவன். பிரஞ்ஞை அல்லது உணர்ச்சி, நன்மை தீமைகளையும், இன்ப துன்பங்களையும், பிற பொருள்களை அறியும் அறிவும் இச்சா சக்தியும் (will) ஆகும். ஆத்மன் என்றும், பிரம்மம் என்றும், புத்தன் என்றும், சிவன் என்றும் விஷ்ணு என்றும் பலதிறப்படக் கூறுவதெல்லாம் சீவத் திரவியத்தின் தனித்தனிக் குணங்களைக் குறிக்கும் பண்புப் பெயர்களே ஆகும். ஆத்மன் நான் அல்லது தான் என்று பொருள்படும். பிரம்மம் அல்லது படைப்பு ஆத்மன் தன்னில் நிகரற்ற எண் குணங்களைப் படைத்துக் கொள்ளுதலை அல்லது படைத்திருத்தலைக் குறிக்கும். அனந்த ஞான சம்பன்னனுதலால் புத்தன் ஆகும். ஆத்மன் அனந்த சுகி அல்லது வரம்பில் இன்பன் ஆகையால் சிவன் (சுகி) என்றும் தன்ஞான சக்தியால் அண்டம் பூராவும் பரவி இருத்தலால் விஷ்ணு (சர்வ வியாபி) என்றும் அழைக்கப்படுகிறுன்.

பிரஞ்ஞை அல்லது உணர்ச்சி உள்ளதையே உயிர் அல்லது பிராணன் என்கிறேம். ஆத்மன் எப்பொழுதும் பிராணனுடன் கூடி இருத்தலால் அதாவது சீவித்திருத்தலால் சீவன் எனப்பட்டான்.

பிராணன் இரு வகைப்படும். ஒன்று சைதன்னிய (உணர்ச்சி, பிரஞ்ஞை)ப் பிராணன்; மற்றென்று திரவியப் பிராணன். சைதன்னியப் பிராணன் பாவப் (இயல்பு) பிராணன் என்றும் கூறப்படும். இது ஆத்மனில் என்றும் இயங்கும் அதாவது இணைபிரியாத பிராணன். முத்தியடைந்த எல்லா சீவன்களிலும் பரிசுத்த சைதன்னியப் பிராணன் மட்டில் இருக்கும். சீவன் முத்த ஆத்மாக்களில் பரிசுத்த சைதன்னியப் பிராணனுடன் திரவியப் பிராணன்களும் இருக்கும். முத்தி அல்லது சீவன் முத்தியடையாத

எல்லா லௌகிக சீவன்களிலும் பலவீனமடைந்துள்ள சைதன்னியப் பிராணனுடன் திரவியப் பிராணன்களும் இருக்கும். புத்கலத் திரவியத்தால் (அணுத்திரள்களால் ஸ்கந்தங்களால்) இயன்றுள்ள பிராணன்கள் திரவியப் பிராணன்களாகும். ஐம்புலன்கள், உடல் சக்தி, வாக்கு சக்தி, மனோசக்தி, ஆயுள், சுவாச உச்சு வாசம் ஆகிய இவை களே திரவியப் பிராணன்களாகும்.

இதயத் துடிப்புகளையே நாம் சாதாரணமாகப் பிராணன் என்கிறோம். அடுத்தடுத்துத் துடிக்கும் இதயத் துடிப்பு (heart beat) நாடித்துடிப்பு (pulsation) அடுத்தடுத்து எழுச்சியும், விழ்ச்சியும் உறும் திரம் அல்லது அலை (wave) தொடர்ந்த அதிர்ச்சி அல்லது அசைவு (vibration) இவற்றின் செயலும் பயனும் ஒன்றிற்கொன்று நிகராகும். எழுச்சியும் விழ்ச்சியுமான பொது நிகழ்ச்சி நோக்கியே இவையாவும் ஒன்றிற்கொன்று சமானமாகக் கருதப்படுகிறது. ஆத்மப் பிரதேசத்தில் (ஆத்மனில்) நீரலை அல்லது நீர்த்திரை போன்ற நிலைத்த அலை ஓட்டம் (stationary wave motion) நிரந்தர மாக நடைபெறுகிறது. இதயத் துடிப்பிற்கு நிகரான இவ்வலை

ஓட்டமே ஆத்மனின் சைதன்னியப் பிராணன் ஆகும். இந்த நிலைத்த அலை ஓட்டமாகிய சைதன்னியப் பிராணனே சீவன் முத்த மற்றும் முத்த ஆத்மாக்களின் கடையிலா அறிவு (கேவல ஞானம்) முதலாக எண்ணப்பட்ட முறையே நான்கு அல்லது என் குணங்களுக்கும் முக்கியமான சுய சாதனம்.

(தொடரும்)

ப ரு த் தி ப் ப ள் ளி

(ஈரோடுப் பகுதியிலுள்ளது.)

இது மிகவும் பழமையான ஊர். இதன் பழமையைப் புலப்படுத்தும் சின்னங்கள் பல அங்குக் காணப்படுகின்றன. இராஜசிம்மச் சதுர்வேதி மங்கலம் என்று அவ்வூர்ச் சிவாலயத்தின் கல்வெட்டில் இதன் மறுபெயர் காணப்படுகின்றன. இங்கு அமுதவல்லி சாகரம் என்ற கிணறும் கால்வாயும் அதற்கருகில் தலையில் ஏழுதலை நாகம்படம் விரித்திருக்கின்றதும் அதன்மேல் மூன்று அடுக்குள்ள குடையமைந்ததும் ஆகிய அருகக் கடவுளின் உருவச் சிலையும் உள்ளது. இது 23-ம் தீர்த்தங்கரர் பாரீஸ்வ நாதர் சிலை.

கம்பதஹல்லி

[வி. ராமமூர்த்தி]

மைசூர் மாநிலத்தில் மண்டியா மாவட்டத்திலுள்ள நாகமங்கலம் என்னும் தாலூகாவில் கம்பதஹல்லி அமைந்திருக்கிறது. பெங்களூரிலிருந்து கம்பதஹல்லிக்குப் போக பஸ்கள் இருக்கின்றன. மைசூரிலிருந்து செல்பவர்கள் ஸ்ரீரங்கப்பட்டினம், நாகமங்கலம் ஆகிய ஊர்களின் வழியாக 50 மைல்கள் பஸ்ஸில் போனால் "பிண்டினவளே" என்னும் ஊரை அடைவார்கள். "பிண்டினவளே"யிலிருந்து இரண்டு மைல் தூரத்தில்தான் கம்பதஹல்லி இருக்கிறது. மண்டியா என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து நாகமங்கலத்திற்கு பஸ்ஸில் வந்து அங்கிருந்து பத்து மைலில் உள்ள கம்பதஹல்லிக்குப் போவோரும் உண்டு. கம்பதஹல்லியில் பிரயாணிகள் தங்க விடுதி இல்லாதது பெரிய குறைதான். இங்கிருந்து பத்துமைல் தொலைவிலுள்ள நாகமங்கலத்தில்தான் தங்கும் வசதி, ஹோட்டல்கள், கடைகள், பெட்ரோல் பங்க் ஆகியவை இருக்கின்றன.

சிறப்பிடங்கள்

கர்நாடகத்தில் இன்று நேற்றையிலிருந்து அல்லாமல் கி. பி. மூன்றும் நூற்றாண்டிலிருந்தே ஜைனர்களுக்கு சில சிறப்பிடங்களுண்டு. அவற்றில் முதலாவது சிரவணபெளகுளாவும், இரண்டாவது கார்க்காலாவும், மூன்றுவது கம்பதஹல்லியும் ஆகும். தென்னாட்டில் ஜைனம் தழைத்தோங்கியிருந்த காலத்தில் பெருநகராகப் போற்றப்பட்ட இந்த கம்பதஹல்லி என்னும் கிராமம் இன்று பிற்போக்கான நிலையில் சீரழிந்த பாழிடமாகவே காண்கின்றது! சுமார் நூறு வீடுகளே உள்ள இக்கிராமத்தின் இன்றைய ஜனத்தொகை எண்ணூறாகும். கம்பதஹல்லியில் ஐந்து சின்னஞ்சிறு அழகிய ஜைனக்கோயில்கள் இன்றும் இருக்கின்றன. மாமல்லபுரத்தில் மாமல்லன் என்ற முதலாம் நரசிம்ம பல்லவன் ஐந்து கல் ரதங்களை ஒரே இடத்தில் அமைத்து பெருமைபெற்றான். அதை நாம் "பஞ்சபாண்டவ ரதங்கள்" என்று சொல்லி வருகிறோம். கம்பதஹல்லியிலும் அதேபோன்று ஐந்து கல் மண்டபங்கள் இருக்கின்றன.

பஞ்சகூடபஸ்தி

"பஞ்சகூட பஸ்தி" என்று அவை அழைக்கப்படுகின்றன. கி. பி. எட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்து வந்த அகளங்கர் என்ற ஜைனர் இங்கு நடந்த ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டதாயும், அவரின் முயற்சியின் விளைவாக பஞ்சகூட பஸ்தி எழுந்ததாயும் கூறப்படுகின்றது. பன்னிரெண்டாம் நூற்றுண்டில் ஹொய்சால அரசன் விஷ்ணுவர்த்தனன் காலத்தில் ஜைனர்களும், வைஷ்ணவர்களும் பூசலின்றி வாழ்ந்து வருகையில் இந்த ஜைனக் கோயில்கள் எழுந்ததாகவும் சொல்லுகிருர்கள். சம உடரமுள்ள இவ்வைந்து ஜைனக் கோயில்களைப் பார்க்கும்போது நமக்கு மாமல்லபுரம் தான் நினைவிற்கு வருகிறது. மாமல்லபுரத்தில் ஐந்தில் கற்றளிகளும் தனித் தனியே உள்ளன. இங்கு பஞ்ச பஸ்திகளும் பிணைத்துக் கட்டப் பெற்றிருக்கின்றன. ஐந்து பஸ்திகளில் இருபத்தி நான்காவது ஜைன தீர்த்தங்கரரான வர்த்தமானர், பார்சுவ நாதர், நேமிநாதர், சந்திரபிரபர், புஷ்பதந்தர் ஆகியோரின் அழகு உருவங்கள் அலங்கரிக்கின்றன. ஒரு மூலத்தானம், ஒரு சுகநாசி, ஒருமுக மண்டபம் ஆகியவற்றைக் கொண்ட ஒவ்வொரு பஸ்தியின் வெளிச்சுவர்களில் மாடங்கள் காண்கின்றன. மாடங்களில் தற்போது சிலைகள் காணப்படாவிடினும் இருபத்துநான்கு தீர்த்தங்கரர்களின் உருவங்கள் இருந்திருக்கின்றன என ஊகிக்க இடமிருக்கிறது. மாடத்தின்மேல் சிற்ப வேலைப்பாடமைந்த மலர்க்கொடிகள் நேர்த்தியாகக் காணப்படுகின்றன. விமானத்தில் மூன்று தளங்கள் உள்ளன. கூடமும், சாலமும் நிறைந்து நிற்கும் இவ்விமானங்களில்கூட முற்காலத்துச் சோழர் கற்றளிகளுக்கிருப்பனபோல அழகு நிறைந்த மாடங்களும் காண்கின்றன. விமான தளங்களில் பூ வேலைகளும், ஹம்ஸ பட்சியின் உருவங்களும் அழகூட்டிக் காண்கின்றன. மூலத்தான வெளிச்சுவரையொட்டி விமானத்தைத் தாங்கி நிற்கும் கம்பங்களும், கம்பங்களிலுள்ள பலகை, கபோதம் ஆகிய பாகங்களும், விமானத்தின் அடித்தளத்தையும் கம்பத்தின் மேல் பாகத்தையும் இணைக்கும் பாகமும் (COURBEL) முற்காலத்துச் சோழர் அல்லது பிற்காலப் பல்லவர் பாணியைத்தான் நினைவுறுத்துகின்றன. இரு விமானங்களின் மூலைகளில் சிங்க உருவங்கள் படுத்த நிலையில் காணப்படுகின்றன. விமானங்களின் மேலே உள்ள ஸ்தூபி அழகான அமைப்பாகும். ஆதீஸ்வரர், அஜிதநாதர், சம்பவர், அபிநந்தர், சுமதிநாதர், பத்மபிரபர், சித்தலநாதர், வசுபூஜ்யர், குந்துநாதர், மல்லிநாதர் ஆகியோரின் சிலை

உருவங்கள் மிக ரம்யமாகத் தோற்றமளிக்கின்றன. இவர்களில் ஆதிநாதர்தான் உலகத்து முதல் ஜைனராவார். சிரவணபெளகுளாவிலுள்ள கும்மடீசரின் தந்தையுமாவார் இவர்.

மஸ்தகாபிஷேகம்

பிரதி ஆண்டு மார்ச் மாதம் தோறும் கம்பதஹல்லியிலுள்ள ஜைன தேவர்களுக்கு திருவிழா நடைபெறுகிறது. அதே காலத்தில் சிரவண பெளகுளாவிலுள்ள உலகம் புகழ் ஜைன தேவரான கோமடீசருக்கு மஸ்தகாபிஷேகம் நடைபெற்று வருவதால், ஆங்கு செல்லும் ஜைன யாத்ரிகர்கள் யாவரும் கம்பதஹல்லிக்கு வருகைதரத் தவறுதில்லை. இவ்வைபவ விழாவின்போது கர்நாடகத்தின் பல பகுதிகளிலிருந்து ஜைனர்கள் இங்கு கூடிக் கொண்டாடுகிறார்கள்.

புராதனச் சிறப்பினைப் பெற்ற இவ்வூர் தற்போது செப்புப் பாண்டங்கள் செய்யும் சிறிய தொழிலிடமாக இருந்து வருகிறது!

சுதேசமித்திரன் ஞாயிறு மலர் (மார்ச்-2, 1966)

மாமல்லபுரம்

மாமல்லன் என்ற பல்லவ மன்னரால் தோற்றுவிக்கப்பட்ட மாமல்லபுரச் சிற்பங்கள் முதன்முதல் ஜைன சமயத்தைச் சார்ந்த குகைக்கோயில்களே. அவ்வுண்மையை அறிய வேண்டுமாயின் அவ்விடங்களைச் சுற்றிப் பார்க்கையில் ஜைன சிற்பங்கள் இருந்ததைக் காட்டும் மாடங்கள் பலவற்றைக் காணலாம். இன்று அம்மாடங்களில் இருந்த சிற்பங்களைக் காண்பதற்குப் பதிலாக அச்சிற்பங்களை செதுக்கிச் சீரழித்துள்ள கோரக்காட்சியைக் காணலாம். பிற்காலத்தில் தோன்றிய மன்னர்களின் மதவெறிச் செயலே அவ்அழிவுக்குக் காரணம் என்பதை அம்மாடங்கள் அறிவித்துக்கொண்டிருக்கின்றன. மற்றொரு மறுக்கமுடியாத உண்மையையும் காண்போம்.

இன்றைய புதைபொருள் ஆராய்ச்சியாளர்களில் சிலர் புரிந்தோ புரியாமலோ, வலிந்தோ அர்ச்சுனன் தபஸ் என எழுதியும் பேசியும் வரும் ஒரு பெரிய பாறையில் யானை உருவத்துடன் காட்சியளிக்கும் சிற்பங்கள் ஜைன சமய வரலாறுகளில் ஒன்றான சிற்பக் காட்சியேயாகும். ஜைன மன்னரான சகர சக்கரவர்த்தியின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. இவ்வுண்மையை நேர்மை எழுத்தாளரும் ஆராய்ச்சியாளருமான திரு. மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள் எழுதியுள்ள மகாபலிபுரத்து ஜைன சிற்பங்கள் என்ற ஆராய்ச்சி நூலைப் படித்து உண்மை காணுங்கள். —ஆசிரியர்.

நினைவாற்றலின் அற்புத சாதனை !

மூளை பலத்தின் வியப்பூட்டும் சோதனை !!

ஆசார்ய ஸ்ரீ துளசி அடிகளின் சீடர்

முனிஸ்ரீ. ஸ்ரீசந்த்ஜி

"கமல் அடிகள்"

நினைவுக்கலை

நினைவுக் கலையும் - நினைவுக் கலைஞரும்

பாரத நாடு எப்பொழுதும் ஆன்மீக வித்தைகளின் நிலைக்களனாக விளங்கிவருகிறது. மேனாட்டு மக்கள் தங்கள் திறமையை அணுசக்தியில் ஈடுபடுத்தியிருப்பதுபோல இந்திய ரிஷிகளும்—முனிவர்களும் ஆத்ம சக்தியின் மலர்ச்சிக்கு முதலிடம் கொடுத்து அதில் அற்புத வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். நினைவு ஆன்மாவின் சிறப்புக்குணம். அதன் மலர்ச்சியின் ஒரு செயலே நினைவுக்கலையாகும். இந்த நினைவுக்கலையில் தேர்ச்சி பெற்றபின் மனிதன் காதால் கேட்ட மாத்திரத்தில் சமஸ்கிருத ஸ்லோகங்கள், நீண்ட எண்கள், தெரியாத மொழிகளின் வாக்கியங்கள் முதலியன மிக எளிதில் நினைவு வைக்க முடியும். இந்நினைவுக்கலையின் மற்றொரு பாகமான கணித வித்தையில் மணிக்கணக்கில் போட்டு முடிக்கவேண்டிய கணக்குகளைச் சில விநாடிகளில் போடமுடியும்.

அணுவிரத இயக்கத் தலைவர் ஆசார்ய ஸ்ரீதுளசி அடிகளின் சீடர் முனிஸ்ரீ ஸ்ரீசந்த்ஜி அவர்களால் படப்பை, வாலாஜாபாத், வந்தவாசி, திண்டிவனம், திருவண்ணாமலை, சிதம்பரம் ஆகிய நகரங்களில் நினைவுக்கலை நிகழ்ச்சி நடந்தது. முனிஸ்ரீ 18—11—1930-ல் கல்கத்தாவில் ஒரு வளமான ஜைன குடும்பத்தில் பிறந்தார். 16-வது வயதில் அவர் ஜைன தேராபந்த் துறவிகள் சங்கத்தில் சேர்ந்து ஆசார்ய ஸ்ரீ துளசியிடம் தீட்சைபெற்றுத் துறவியானார். படிப்பில் அவர் நுண்ணறிவுடையவராய் இருந்தார். M.A.க்குச் சமமான தேர்வில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேறினார். 23-வது வயதில் அவர் இந்நினைவுக் கலையில் வல்லுநரானார். இந்தியில் அவர் எழுதிய பல நூல்கள் வெளிவந்துள்ளன. தற்போது அவர்

ஜைன ஆகமங்களை ஆராய்வதில் ஈடுபட்டுள்ளார். உத்தரப் பிரதேசத்தில் சீதாப்பூர் என்ற ஊரில் தொடர்ந்து 13 மணி நேரத்தில் 1500-கேள்விகளுக்கு விடையளித்து நினைவுக்கலை வரலாற்றில் இணையற்ற அற்புத சாதனை புரிந்துள்ளார். தொடர்ந்து ஓராயிரம் எண்களைக் கேட்டப் பின் வரிசைக்கிரம மாகவும் தலைகீழாகவும் சொல்லித் தனிச்சிறப்புப் பெற்றார்.

பத்தாயிரத்து இருநூற்று ஒன்று கட்டங்களில் எண்களை நிரப்பி அதில் ஏதாவது ஒரு வரிசையில் ஏதாவதொரு கட்டத் தின் எண்ணைக் கேட்டால் உடனே கூறி அவர் நினைவாற்றல், கணிதம் இரண்டிலும் அற்புத சாதனை புரிந்துள்ளார்.

சப்த சந்தானமும் இரண்டு பக்கங்களிலும் கோடிக்கணக் கான எண்களைப் பெருக்குவது அவருக்கு இடதுகை விளை யாட்டு. அவர் கல்கத்தா, பாட்னா, பனாரஸ், லக்னோ, கான்பூர், டில்லி, ஜெய்பூர், பிகானீர், ஜோத்பூர், உதயபூர், உஜ்ஜெயினி, ரத்லாம், அஹமதாபாத், சூரத், பம்பாய், சென்னை முதலிய நாட்டின் தலைமையான நகரங்களில நினைவுக்கலை நிகழ்ச்சி களில் நூற்றுக்கு நூறு வெற்றிபெற்றுள்ளார். டில்லியில் விஞ்ஞான பவனத்தில் நூற்றுக்கணக்கான அரசியல் தூதர் கள், வெளிநாட்டவர், மத்திய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்வி நிபுணர்கள், பத்திரிகையாளர்கள், இலக்கிய ஆசிரியர்கள், ஆகியோரின் இடையே ஆச்சரிய கரமான நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார். எல்லா மொழி செய்தி பத்திரிகைகளும் அவருக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதின. ஜெர்மன் தூதரகத்தின் வேண்டுகோளுக்கிணங்க டில்லி பல்கலைக்கழகக் கட்டிடத்தில் மீண்டும் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. ஜெர்மன் தூதரகம் இந்தச் சாதனையை டெலிவிஷன் மூலம் ஐரோப்பாவில் காட்டியது.

நினைவுக்கலை நிகழ்ச்சி நிரல்

(அவதானம்)

1. எண் நினைவு :

   மூன்றுஸ்தான எண்கள் இருபத்தைந்து ஐந்து துண்டு களாகக் கூறுவது.

2. மொழி நினைவு :

   உலக மொழிகளில் ஏதாவதொரு இருமொழிகளில் ஐந்து சொற்களுக்குள்ள வாக்கியங்கள் கூறுதல்.

3. தேதி, கிழமை கூறுதல் :

ஏதாவது ஒரு வருஷம், மாதம், தேதி சொன்னவுடன் அந்தக்கிழமை என்ன என்று கூறுதல். வருஷத்தைக் கூறி மாதம், தேதி, கிழமை இம்மூன்றில் எவையேனும் இரண்டினைக் கூறினால் மூன்றாவதை சொல்லுதல்.

4. சுலோக நினைவு :

சம்ஸ்கிருத மொழியில் ஏதாவதொரு செய்யுளைக் கூறுதல்.

5. நினைத்த எண்ணைக் கூறுதல் :

1-முதல் 9-வரையுள்ள எண்களில் ஏதாவதொரு எண்ணை நினைத்துக் குறிப்பிட்ட முறையில் அந்த எண்ணைப் பெருக்கிக் கூட்டி வந்த பலனில் ஏதாவதொரு எண்ணைக் கூறினால் நினைவுக் கலைஞர் முழு எண்ணையும் கூறுவதோடு, நினைத்த எண்ணையும் கூறுவார்.

6. வியப்பூட்டும் கணக்கு :

மூன்றுபேர் மூன்று எண்ணை நினைத்துக்கொள்ள வேண்டும். (அந்த எண் பின்ன எண்ணாக இருக்கக் கூடாது.) நான்காமவர் எனக்கு இந்தத்தொகை வேண்டும் என்று கூறுவார். நினைவுக் கலைஞர் எண் நினைத்தவர்களைக் கூட்டிக் கழித்துப் பெருக்கி வகுக்கச் சொல்வார். வரும் விடை நான்காமவர் கேட்ட தொகையாக இருக்கும். அவர் விரும்பினால் மூவரின் விடையையும் வெவ்வேறாகவும் வரச்செய்யலாம். நினைவுக் கலைஞர் முதலிலிருந்து கடைசிவரை எதுவும் கேட்கமாட்டார்.

7. வர்க்கமூலம் கூறுதல் :

கேள்வி கேட்பவர் ஏதாவதொரு எண்ணை நினைத்துக் கொள்ள வேண்டும். பின் அதே எண்ணால் அதை 8-தடவை பெருக்கவேண்டும். பின் கேட்டவர் பெருக்கல் பலனைக் கூறினால் நினைவுக் கலைஞர் வர்க்கமூலம் கூறுவார். கடைசி பெருக்கல் பலன் 18 எண்களுக்கு மேல் இருக்கக் கூடாது.

8. சம கூட்டல் யந்திரம் :

ஒரு வரிசைக்கு ஐந்து கட்டங்களாக 5 வரிசைகளில் 25 கட்டங்கள் போட்டுக்கொள்ளவேண்டும். ஏதாவ

தொரு தொகையைக் கூறிஞல் நினைவுக்கலைஞர் அந்தக் கட்டங்களை எண்கள் கூறி நிரப்பச் சொல்வார். 25 கட்டங்களும் நிரம்பியபின் எப்படிக் கூட்டிஞலும் கூறிய தொகை வரும்.

9. ரகசியம் அம்பலம் :

ஒன்பது பேர் ஏதாவது ஒரு பொருளைத் தங்களுக்குள் மூன்று முறைகள் பரிமாரிக்கொள்வார்கள். கணிதத்தின் மூலம் முதலில் அந்தப் பொருள் ஒன்பது பேரில் யாரிடமிருந்தது என்றும் பிறகு அது யார் யார் கைமாறி இப்போது யாரிடமிருக்கிறது என்பதைக் கூறி விடுவார்.

10. புத்தகத்திலுள்ள சொல்லைக் கூறுதல் :

கேள்வி கேட்பவர் ஒன்பது புஸ்தகங்களில் ஏதாவது ஒரு புஸ்தகத்தில் ஏதாவதொரு பக்கத்தில் ஏதாவதொரு வரியில் ஏதாவதொரு சொல்லுக்கடியில் கோடிட வேண்டும். நினைவுக்கலைஞர் கணிதவாயிலாக அந்தச் சொல்லைக் கண்டுபிடிப்பார்.

11. அதிகநாள் கொண்ட மாதம் கூறுதல் :

விக்ரம சகாப்தத்தில் எந்த வருஷத்தில் எந்த மாதம் அதிக நாட்களைக் கொண்டிருந்தது எது குறைவாகக் கொண்டிருந்தது என்று கேட்டால் விடை கூறுவார்.

12. பெருக்கல் பலன் கூறுதல் :

கேள்வி கேட்போர் நான்கு ஸ்தான எண்கள் இரண்டு கூறிஞல் அவற்றை வாய்க்குள்ளேயே பெருக்கி விடை கூறுவார்.

13. தொலைபேசி எண் நினைவு :

ஏதாவதொரு தொலைபேசி எண்ணை நினைவு வைத்தல்.

14. பொருள் நினைவு :

எவையேனும் ஐந்து பொருள்களைக் காட்டியபின் அவைகளைக் காட்டிய வரிசையில் கூறுதல்.

இத்தனை சோதனைகளையும் கூறியபின் இவற்றை ஒவ்வொன்ருக வரிசைக்கிரமமாகவோ அல்லது தலைகீழாகவோ அல்லது குறிப்பிட்ட ஒன்றையோ கலைஞர் கடைசியில் கூறுவார். ஐந்து முறைதனித்தனியே கூறிய எண்கள் 25யும் வரிசைப்படுத்தியோ அல்லது தலைகீழாகவோ அல்லது குறிப்பிட்ட ஒரு எண்ணையோ கூறுவார்.

மேலும் பலவகைகள் உண்டு.



அறிஞர் அண்ணு அவர்கள்
கோமடேசுவரர் திருமேனியை வணங்கி எழுதிய

கருத்தோவியம்

"நான் எங்கு இருந்துவிட்டு வருகிறேன் தெரியுமா, தம்பி! அதைச் சொல்கிறேன், பிறகேனும் என் மனப்போக்கின் முழுத்தன்மையை அறிந்துகொண்டு, அமைதி பெறும் முயற்சியில் ஈடுபடவேண்டுகிறேன்.

அரசியல் உலகு, அற்புதங்கள், உற்பாதங்கள், அதிர்ச்சிகள் ஆக மகிழ்ச்சிதரும் நிகழ்ச்சிகள், எக்களிப்புகள், எரிச்சலூட்டும் சம்பவங்கள், வெற்றிகள், தோல்விகள் யாவும் நிரம்பிய இடம்.

எல்லாத் துறைகளும் அவ்விதம்தான், என்பாய். ஒரு மாறுபாடு உண்டு. மற்ற எந்தத் துறையினையும்விட, அரசியல் துறையிலே எதிர்பாராத நிகழ்ச்சிகள், ஏமாற்றங்கள், எரிச்சல்கள் நிரம்ப ஏற்படும், விசித்திரமான உலகு.

விசித்திரமானது அரசியல் உலகு என்பதற்கு வேறெந்த எடுத்துக்காட்டும் வேண்டாம். நான் இப்போது எங்கு சென்றுவிட்டு வந்திருக்கிறேன் என்பதைக் கூறுகிறேன், கேளேன், அதுபோதும்.

பெங்களூர் நகரில் ஜெயநகர் என்ற பகுதியில் ஜெய விலாஸ் என்ற இல்லத்தில் தங்கியிருந்துவிட்டு வருகிறேன்! வேடிக்கை அல்ல, தம்பி! விசித்திரம், ஆனால் உண்மை!

தோல்வி கிடைத்ததும் நான் சென்று தங்கியிருந்த இடம் ஜெயவிலாசம்—ஜெயநகர்! போதுமா விசித்திரம்.

என்ன செய்துக்கொண்டிருந்தேன்? பலரும் வந்திருந்து எனக்கு ஆறுதல் கூற, அதைக் கேட்டுத் துயரத்தைத் துடைத்துக் கொண்டு மன அமைதி பெற்றுக்கொண்டிருந் தேன்போலும் என்று எண்ணுகிறாய். அதுதான் இல்லை! பலருக்கும் ஆறுதல் கூறிக்கொண்டிருந்தேன். வெற்றிபெற்று, வீடுகூடச் செல்லாமல் என்னோடு வந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் மகிழ்ச்சியாக இருக்கும்படிச் செய் வதிலும் என்னைப்போலவே காலில் வெட்டுப்பட்டுக்கிடக்கும் திருவண்ணாமலைத் தோழர் ப. உ. ஷண்முகத்திற்கும், வேலூர் சாரதிக்கும் ஆறுதல் கூறுவதிலும் ஈடுபட்டிருந்தேன். அவர் களுக்கு ஆறுதல் எதற்காகக் கூறினேன்? அவர்கள் தமது தோல்வியைப் பற்றி துக்கம் துளைத்த நிலையில் இருந்ததால் என்கிறாயா? அதுதான் இல்லை! என் பொருட்டு அவர்கள் கொண்டிருந்த வேதனையைத் துடைத்து ஆறுதல் அளித்துக் கொண்டிருந்தேன்.

பல ஆண்டுகளாகவே எனக்கு, பேசாமலே பலகூறும் பேருருவாக அமைந்திருக்கும் சிற்பக்கலைச் சிறப்புக்கு ஈடற்ற எடுத்துக்காட்டாக விளங்கிடும் கோமடீஸ்வரர் சிலையினைக் காணவேண்டும் என்ற ஆவல் உண்டு. அந்த இடத்துக்கு அருகே கூடச் சென்றிருப்பேன், காண வாய்ப்பும், ஓய்வும் கிடைத்ததில்லை. அழகிய சிறுகுன்றின் மீது அமைந்திருக்கும் பேசாப் பேருருவை இம்முறைதான் கண்குளிரக் காண முடிந்தது.

பெங்களூர் நகரிலிருந்து நூறுகல் தொலைவில் உள்ள சீரூர், சிரவணபெல்கோலா என்பது. அங்குதான், வெளி நாட்டு விற்பன்னர்களும் கண்டு வியந்திடும் அந்தச் சிற்பம் இருக்கிறது குன்றின் மீது. அறுபது அடி உயரம் அந்தப் பேருரு! பிறந்த மேனி! திறவாக் கண்கள், எனினும் கனிவு வழிகிறது! நின்ற நிலை! காண்போரை நின்றநிலை யினராக்கிவிடும் கவர்ச்சி!

அந்தப் பேருருவிற்குப் பின்னணியாக நீலநிறவானம்! தன்னை மறந்த நிலையில் பிறந்த மேனியாய் நிற்கும் அந்தப்

பேருரு, மனதினை ஓரிடத்தில் பதியவைத்து மற்ற எதனையும் எண்ணிட முடியாத நிலைபெற்று இருக்கும் காட்சி, கண்டாரே கருத்தறிவார். கண்டதனை விளக்கிட இயலாது; உண்மை.

காலடியில் புற்றுகள்! செடிகொடிகள்! செடிகொடிகள் கோமடீஸ்வரரின் காலிலும், கரத்திலும், மார்பிலும் படருகின்றன. அசையாநிலை! உணராநிலை! மனம் ஓரிடத்தில் முழுக்க முழுக்க ஒன்றிவிட்டதனால், செடிகொடி படருவது பற்றிய உணர்ச்சியே எழவில்லை. செடிகொடிகள் மட்டுமல்ல தம்பி! சீறிடும் பாம்புகள்! உடலைச் சுற்றிக்கொண்டுள்ளன. உணர்வு இல்லை! கனிவும், கவர்ச்சியும் மிக்கதோர் நிலையில் பேருரு!

இவ்வளவையும் இதற்கு மேலாகவும் கல்லுரு காட்டி நிற்கிறது. கண்டு கருத்துப் பெறாதார், நடமாடும் கல்லுரு என்றே கூறலாம்.

உற்று உற்றுப் பார்த்தேன், அப்பேருருவினை! நெருங்கி நின்று பார்த்தேன்! தொலைவிலிருந்து பார்த்தேன். பார்க்கப் பார்க்க மேலும் மேலும் பார்த்துக்கொண்டிருக்கும் எண்ணம் எழுகின்றது.

உறுதி ஒன்றில் இலயித்துவிட்டால் வேறு எந்த உணர்வும் தீண்ட முடியாத நிலைபெறும் இயல்பு, பேருரு காட்டிடும் அரும்பெரும் பாடம். ஆமாம் தம்பீ! தேர்தலிலே தோல்வி என்றால், நெஞ்சிலே துக்கம் துளைக்கிறது என்கிறோமே, பாம்பு சுருட்டிக்கொள்கிறது உடலில், மனம் ஒன்றில் இலயித்துப்போனதால் அரவம் தீண்டுவது பற்றி உணர்வே இல்லை, கண்ட நான் எண்ணிக்கொண்டேன் அந்த உறுதிவேண்டும். ஒன்றில் மனதைப் பதியவைத்துவிட்டால் வேறு உணர்வுகள் நம்மைத் தீண்டிடும் வலிவற்றுப் போகும் நிலை ஏற்படவேண்டும் என்று விரும்பினேன்.

அந்த எண்ணத்துடன்தான் ஸ்ரவணபெல்கோலாவை விட்டுத் திரும்பினேன். இங்கே, நீ இன்னமும் என்பொருட்டு ஏங்கிக்கிடப்பது அறியும்போது, என்மனம் எப்படி இருக்கும்? எண்ணிப்பார், தம்பீ!!''

ஆசிரியர் குறிப்பு:

11—3—62ம் தேதி திராவிட நாடு இதழில் எழுதிய ''அறுவடையும்—அணிவகுப்பும்'' என்ற தலைப்பில் தம்பிக்கு எழுதிய கடிதத்திலிருந்து, காஞ்சி திரு கே. ஜே. அகஸ்தியப்ப ஜெயின் அவர்களால் அனுப்பப்பெற்றது

புராதன ஜைனர் கோயில்

—[என். வி. ஆர். எஸ்]—

மைசூர் நகரத்திற்கு வடமேற்கில் சுமார் 16 மைல் தூரத்தில் கோமதகிரி கிராமத்திலுள்ள இந்த புராதன ஜைனர் கோயிலைப் பற்றி சுமார் பதினைந்து இருபது வருடங்களுக்கு மூன்பு ஒருவருக்கும் தெரிந்திருக்கவில்லை.

இக் கோயில் நூறு அடி உயரத்தில் சிறு குன்றின் மீது அமைந்துள்ளது. இந்த மலைக் கோயிலின் அமைப்பு பார்வைக்கு 'ரதம்' போலும் கிட்டத்தட்ட திருக்கோவிலூர் கோயிலைப் போலும் காணப்படும்.

அடர்த்தியான புதர்களால் சூழப்பெற்று கோயில் இருப்பதே எவருக்கும் தெரியாமல் இருந்தது. குன்றின் மீது ஏறுவதற்கும் வசதி இல்லாமல் அடர்ந்த காடுகள் மறைத்துக் கொண்டிருந்தன. ஆனால் மைசூர் மகாராஜாவின் தந்தை ஸ்ரீ கிருஷ்ண ராஜ உடையாருக்கு இம்மலை மீது ஒரு கோயில் இருப்பது தெரிய வந்து அவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் பேரில் மலை மீதுள்ள அடர்ந்த புதர்கள் நீக்கப்பட்டு கோயில் பார்வைக்கு எட்டியது. பிறகு பல ஜைனர்களுக்கு விஷயம் தெரிய வரவே, அவர்கள் நிதி திரட்டி, இடி மின்னல் தாக்குதலால் பலவிடத்தில் கோயில் பிளவுபட்டிருந்ததைச் சீர்படுத்தினர். இதற்கு முன்பு குன்று வரை செல்ல சரியான பாதை இல்லாதிருந்ததையும் செப்பனிட்டனர்.

இதர ஜைன கோயில்களைப் போலவே நான்கு தூண்களுடன் மண்டபம் அமைந்திருக்கிறது. உள்ளேயுள்ள கோமடீசர் சிலை 16 அடி உயரத்தில் அழகாக வீற்றிருக்கிறது.

முதன் முதலில் 1950ம் வருடம் மகா மஸ்தகாபிஷேகம் நடைபெற்றது. அதிலிருந்து ஒவ்வொரு வருடமும் பற்பல இடங்களிலிருந்து ஏராளமான ஜைனர்கள், செப்டம்பர் மாதம் இங்குகூடி திருவிழாவை நடத்தி வருகின்றனர். அப்பொழுது நூற்றுக்கணக்கான டின்களிலும், குடங்களிலும் பால் அபிஷேகம் செய்யப்படுகிறது. இக் கோயிலிலுள்ள கோமடீசர்

சிலை யாரால் எப்பொழுது ஸ்தாபிக்கப் பட்டது என்பது தீர்மானமாகத் தெரியவில்லை. ஆனால் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள், இச்சிலை 10ம் நூற்றுண்டைச் சேர்ந்ததாக இருக்கவேண்டும் என்று கருதுகிருர்கள்.

மைசூர் நகருக்கு வரும் யாத்ரீகர்களும், உல்லாசப் பிரயாணிகளும் இப்புராதனக் கோயிலுக்குச் சென்று பார்க்கத் தவறுவதில்லை.

தினமணி சுடர் 9-2-69.

Statement about ownership and other particulars about newspaper "NALLARAM"

FORM IV

1. Place of Publication	...	No. 5, Thaiyappa Mudali St., Madras-1.
2. Periodicity of its Publication	...	Monthly.
3. Printer's Name	...	SRI. S. JEEVAKAN
,, Nationality	...	Indian.
,, Address	...	Dharmadevi Press, No. 90, Pedariar Koil Street, Madras-1.
4. Publisher's Name	...	SRI. D. APARAJITHAM
,, Nationality	...	Indian.
,, Address	...	No. 5. Thaiyappa Mudali St., Madras-1.
5. Editor's Name	...	SRI. D. APARAJITHAM
,, Nationality	...	Indian.
,, Address	...	No. 5, Thaiyappa Mudali St., Madras-1.
6. Name and address of the individual who owns the newspaper		SRI. D. APARAJITHAM No. 5, Thaiyappa Mudali St., Madras-1.

I, D. Aparajitham, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

D. APARAJITHAM,
Publisher.

Dated 15th March, 1969.

நல்லறம்

5, நையப்ப முதலி தெரு, சென்னை-1

தமிழகத்தில் ஜைன சமயத்திற் கென ஒரே தமிழ் திங்கள் இதழாக விளங்கும் நமது நல்லற இதழின் வளர்ச்சியில் ஆர்வமும் அன்பும் உள்ள பெருமக்கள் தங்கள் ஆதரவை அளிக்கும் வகையில் நன்கொடை வழங்கி வருகிறார்கள். அப்பெருந்தகையார்களுக்கு நன்றி செலுத்தி அளிக்கும் பெயர்கள் வருமாறு.

காஞ்சீபுரம்

		ரூ.	பை.
1.	திரு. A. அருக்ககீர்த்தி நைனார் அவர்கள் 12-D. செட்டி தெரு	25	00
2.	திரு. S. புஷ்பநாத நைனார் அவர்கள் பலசரக்கு மளிகை. காந்தி ரோடு	20	00
3.	திரு. அ. சாந்தி நைனார் அவர்கள் பட்டு மளிகை. காந்தி ரோடு	10	00
4.	திரு. ச. கி. சுயம்பு நைனார் அவர்கள் 22. வ. ஈ. கோவில் தெரு	10	00
5.	திரு. S. அப்பாண்டை. B.A., அவர்கள் (Retd. Indian Police)	10	00
6.	திரு. A பத்மராஜ் ஜெயின் அவர்கள் 29-B, K. A. கோயில் தெரு	10	00

சென்னை

		ரூ.	பை.
7.	திரு. S. அனந்த பத்மநாப ஜெயின் அவர்கள் 1/14, நையப்ப முதலி தெரு	10	00

முக்கிய அறிவிப்பு

"நல்லறம்" மாதந்தோறும் 15ந்தேதி சந்தாதாரர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படுகிறது. 18ந் தேதிக்குள் நல்லறம் கிடைக்கப் பெறாதவர்கள் நல்லறம் அலுவலகத்திற்குத் தெரிவித்தால் அவர்களுக்கு மற்றோர் இதழ் அனுப்பி வைக்கப்படும்.

இதுவரை சந்தா செலுத்தாதவர்களை சந்தா தொகையான ரூபாய் 4/- உடனே அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

D. அபராஜிதம்
வெளியிடுபவர், நல்லறம்

Regd. No. M. 8486 NALLARAM 15—3—1969

தருமதேவி அச்சகத்தில் அச்சிட்டவர்: S. ஜீவகன்
ஆசிரியரும், வெளியிடுபவரும்: D. அபராஜிதன், நெ 5, தையப்ப முதலி தெரு, சென்னை-1, தமிழ்நாடு